நாற்கடசம், ஒலைப்பாய், ஒலைப்மல், தேங்காய்எண்ணெய், ஆமணக்கெண்ணெய், மண்ணெண்ணெய், பனையோலை, தும்புக்கட்டு, சாக்குக்கட்டுக் கட்டுத்தடி, தும்புக்கயிறு, சாக்கு என்னும் இந்தச் சாமான்கள் கேட்குதோரமே யாழ்ப்பாணம் உப்புமால் கியாதெரு உப்பளம், தொண்டமனார் உப்புக்குமை ஆகிய இந்த விடங்களில் கொடுக்கிறதற்கு 1909 ம் ஆண்டுக்கு ஒப்பந்தங் கேட்க விரும்புவருடைய கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

2. கேள்விப்பத்திரம் இணைப்பிரதியுடன் ஒரு உறைக்குள் வைத்து ஒட்டி முத்திரையிட்டு கவண்மேந்து ஏசண்டுத்துரைக்கு விலாசம்போட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் கவண்மேந்து ஏசண்டுத்துரையுடைய கந்தோரில் கேள்விக்காரன் தானுகக் கொடுக்கலாம் அல்லது தபாலில் அனுப்பலாம்.

4. கேள்விப்பத்திரத்தில் "Tender for supplying materials 1909" என்று உறையின் இடதுபக்க மேலுமூலையில் போடப்பட்டிருத்தல் வேணும். அப்பத்திரம் யாழ்ப்பாணக் கச்சேரியில் 1908 ம் ஆண்டு மார்கழிமாதம் 15 ந் தேதி பின்பகல் 2 மணிக்குமுன் சேரவேண்டும்.

5. கேள்விப்பத்திரம் எழுத மாதிரிக்கடுதாசி யாழ்ப்பாணக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். அந்த மாதிரிக்கடுதாசியில் எழுதாத வேறு எவ்விதப் பத்திரமும் ஏற்கப்படமாட்டாது.

6. கச்சேரியில் ரூபா 20 கட்டிப் பற்றுச்சீட்டுக் காட்டினவருக்கே மாதிரிக்கடுதாசி கொடுபடும். ஒருவருடைய ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொண்டதென்று அறிவித்தல் அவர் கேட்ட நாள் தொடக்கம் பத்து நாளைக்குள் ஒப்பந்தம் ஏற்க பிணைகொடுக்க அல்லது உறுதிமுடிக்க தவறினால் கட்டின காசு கவண்மேந்துக்கு இனுமாகும். ஒப்பந்தம் கைச்சாத்திட்டு முடிவனவுடன் மற்றக் கேள்விக்காரருடைய காசு திருப்பிக் கொடுபடும்.

7. ஒவ்வொரு கேள்விப்பத்திரத்தோடு இரண்டு தகுதியானபேர் பிணை நிற்போமென்று சம்மதங் காட்டும் பத்திரமும் அனைத்திருக்க வேண்டும். அவர்களுடைய விலாசமும் காட்டியிருக்க வேண்டும்.

8. ஒப்பந்தம் கொடுக்கு நாளில் கொடுக்கவேண்டிய சாமான்களுக்கு மாதிரிப் பொருட்களும் கொடுக்கவேண்டும்.

9. ஒப்பந்தத்தை சரியாய் ஒப்பேற்றுவதற்காக போதிய பிணைகாரர் பிணையுறுதிக்குச் சேரவேண்டும். பிணையுறுதியின் செலவையும் வேறுவித தேவையான விபரங்களும் கந்தோரில் கேட்டுக்கொள்ளலாம்.

10. மேற்சொல்லப்பட்ட பிரமாணங்களுக்கு அமையாத யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

11. எந்த கேள்விப்பத்திரத்தையுங் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்க அல்லது நியாயஞ்சொல்லாது மறுக்க முழு உரிதுமும் கவண்மேந்துக்குண்டு.

ஈ. நீ. இயுக்ஸ்,
கவண்மேந்து ஏசண்டுருக்காக.

யாழ்ப்பாண கச்சேரி,
1908 ம் ஆு கார்த்திகை மீ 5 ந் உ.

[Tenders for the Civil Medical Department.]

பின்வரும் காணப்படும் ஆசுபத்திரிகளுக்கு 1909 ம் ஆண்டிலே தேவையான சாப்பாட்டுச் சாமான்களைக் கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொரு ஆசுபத்திரிக்கும் தனித்தனி ஒப்பந்தக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத் தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்ப வேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "———ஆசுபத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1908 ம் ஆண்டு கார்த்திகை மீ 17 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும். தபாலுறையின் மேற்புறத்தில் ஆசுபத்திரியின் பெயரும் எழுதவேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதியனுப்ப வேண்டும். இந்த கேள்விப்பத்திரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம், அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் பின்வரும் காணப்படும் அட்டவணையின்படி முற்பணத்தைத் திறைச்சேரியில் அல்லது கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதி யனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கைவிடுக அல்லது தக்க பிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திருத்து ஒப்பந்தம் தீர்த்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததின்மேல், ஏற்றுக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. கொந்திருத்து ஏற்றகாலம், ஒப்பந்தம் சரியாய் நடைபெறுதற்குப் பிணையாய் வருவோமென்று இரண்டு போதிய ஆட்கள் எழுதிக் கையொப்பமிட்ட ஒரு தபால் ஒவ்வொரு கேள்விக் கடுதாசியுடனும் அனுப்ப வேண்டும். இந்த இரண்டு பேருடைய மேல்விலாசமும் அந்தத் தபாலிற் காட்டவேண்டும்.

8. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்க வேண்டும்.

9. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் காணப்படும் பணப்பிணை கொடுக்கவும், ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டியதொகை பணப்பிணையின் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். ஐந்நூறு ரூபா அல்லது மேற்பட பிணை கட்டவேண்டிய ஒப்பந்தக்காரர் தாங்கள் கட்டவேண்டிய தொகையை வேண்டுமானால் நிலைப்பணமாக (Fixed Deposits) ஒரு வங்கியில் கட்டவேண்டும். இதன்மேல் பிரியமானால் எவ்வேலையிலாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுதியைக் கொந்திருத்துக்காரன் கொடுத்துப் பணப்பிணையை மீட்டுப் புதுப்பிணை உறுதியைத் தன் செலவில் முடித்துக்கொள்ளலாம். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

10. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால், அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக் கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. ஒப்பந்தக் கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

அட்டவணை.

| ஆசுபத்திரியின் பெயர். | கேள்விப்பத்திரம் பெறுதற்கு முன் கட்டவேண்டிய தொகை. | | பணப்பிணைத் தொகை. |
|---|---|---|---|
| | ரூபா. | | ரூபா. |
| கொழும்பு பெரிய ஆசுபத்திரியும் மேற்படி சொயிசா பிரசவ ஆசுபத்திரியும், பொறளை பெண்கள் ஆசுபத்திரியும் | 500 | ... | 1500 |
| கொழும்பு வைத்திய ஆசுபத்திரி ... | 500 | ... | 2000 |
| கொழும்பு பெரிய ஆசுபத்திரியிலே தோட்டத்துரைமாருக்கும், கப்பற்காரருக்கும், பிரயாணிகளுக்குமாக விடப்பட்டவும், அந்தோனிஸ் காக்கில் என்ற பெயர் நினைவுமுடைய படுக்கைஅறைகளுக்குமாக ... | 500 | ... | 500 |
| களுத்துறை, அம்மை, பேதி, பொக்குவிப்பான் ஆசுபத்திரிகள் ... | 500 | ... | 500 |
| விக்டோரியா கண்நோய் ஆசுபத்திரி ... | 500 | ... | 500 |
| உனவட்டுன தேசநோய் ஆசுபத்திரி ... | 125 | ... | 250 |
| கெத்தல குஷ்டரோக ஆசுபத்திரி ... | 500 | ... | 1000 |
| ராகம ஏழைகள் ஆசுபத்திரி ... | 500 | ... | 500 |
| கண்டி சிவில் ஆசுபத்திரியும் மாங்யாவா ஆசுபத்திரியும் அம்மை ஆசுபத்திரியும் | 500 | ... | 1000 |
| கொழும்பு பொலிசு ஆசுபத்திரி ... | 500 | ... | 500 |
| சிவில் ஆசுபத்திரி மாத்தறை ... ... | 200 | ... | 400 |
| நுவரெலியா ஆசுபத்திரியும் பேக்கர்அறையும் ... | 500 | ... | 500 |
| சிவில் ஆசுபத்திரி தங்காலை | 100 | ... | 200 |
| சிவில் ஆசுபத்திரி கட்கொஸ்தோட்டை ... | 75 | ... | 150 |
| சிவில் ஆசுபத்திரி மாறவில்லா ... ... | 150 | ... | 300 |
| மெதகம ஆசுபத்திரி ... | 125 | ... | 250 |
| லேடிகவலக் ஆசுபத்திரி, கொழும்பு ... ... | 500 | ... | 500 |

(கையொப்பம்), ஜீ. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசருக்காக.

கொழும்பு, 1908 ம் ஆண்டு ஐப்பசி மீ 22 ந் தேதி.

---

[Tenders for the Civil Medical Department.]

பின்வரும் காணப்படும் ஆசுபத்திரிகளுக்கு 1909 ம் ஆண்டிலே தேவையான சுத்தமான பசுப்பால் கொடுக்கிறதற்கு கொந்திருத்து ஒப்பந்தம்செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொரு ஆசுபத்திரிக்கும் தனித்தனி ஒப்பந்தக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும்; அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின்புறத்தில் இடதுகை மேல் மூலையில் "——— ஆசுபத்திரிக்குச் சுத்தமான பசுப்பால் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக்கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1908 ம் ஆண்டு கார்த்திகை மீ 17 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும். தபாலுறையின் மேற்புறத்தில் ஆசுபத்திரியின் பெயரும் எழுதவேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதியனுப்ப வேண்டும். இந்த கேள்விப்பத்திரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடமிருந்து அல்லது அந்த அந்த மெடிக்கல் ஆபிசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் பின்னுற் காணப்படும் அட்டவணையின்படி முற்பணத்தைத் திறைசேரியில் அல்லது கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்க பிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திருத்து ஒப்பந்தம் தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. கொந்திருத்து ஏற்றகாலம், ஒப்பந்தம் சரியாய் நடைபெறுதற்குப் பிணையாய் வருவோமென்று இரண்டு போதிய ஆட்கள் எழுதிக் கையொப்பமிட்ட ஒரு தபால் ஒவ்வொரு கேள்விக்கடுதாசியுடனும் அனுப்பவேண்டும். இந்த இரண்டு பேருடைய மேல்விலாசமும் அந்தத் தபாலிற் காட்டவேண்டும்.

8. பால் மாதிரி கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

9. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்னுற் காணப்படும் பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பணப்பிணையின் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இதன்மேல் பிரியமானால் எவ்வேளையிலாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுதிகளைக் கொந்திருத்துக்காரன் கொடுத்துப் பணப்பிணையை மீட்டுப் புதுப்பிணை உறுதியைத் தன் செலவில் முடித்துக்கொள்ளலாம். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

10. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால், அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் கேள்வி சரியீனமாகக் கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. ஒப்பந்தக் கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ண்மேந்தாருக்குண்டு.

அட்டவணை.

| ஆசுப்பத்திரியின் பெயர். | கேள்விப்பத்திரம் பெறுதற்கு முன்கட்டவேண்டிய தொகை. | பணப் பிணைத் தொகை. |
|---|---|---|
| டிஸ்திறிக் ஆசுப்பத்திரி. | ரூபா. | ரூபா. |
| அவிசாவலை ... | 25 ... | 50 |
| நாவெபாடை | 25 ... | 50 |
| டெல்தொட்டை ... | 25 ... | 50 |
| தொலஸ்பாகே ... | 25 ... | 50 |
| கெலிலைப்பொக்கே ... | 25 ... | 50 |
| மஸ்கேலியா ... | 25 ... | 50 |
| மதுறட்டா ... | 25 ... | 50 |
| தாவலப்பிட்டி ... | 25 ... | 50 |
| புசலாவை ... | 25 ... | 50 |
| றம்பொடை ... | 25 ... | 50 |
| தெல்டெனியா ... | 25 ... | 50 |
| உடபுசலாவை ... | 25 ... | 50 |
| தெனியாயா ... | 25 ... | 50 |
| அனுகலை ... | 25 ... | 50 |
| பலாங்கொடை பறங்கி ஆசுப்பத்திரியும் ... | 25 ... | 50 |
| கரவனெல்லா ... | 25 ... | 50 |
| றக்வானை ... | 25 ... | 50 |
| சிவில் ஆசுப்பத்திரி. | | |
| குருனாகல் ... | 25 ... | 50 |
| மாதலை ... | 25 ... | 50 |
| இரத்தினபுரி ... | 25 ... | 50 |
| கேகலை ... | 25 ... | 50 |
| ஏழைகள் ஆசுப்பத்திரி. | | |
| ஆகமம் ... | 25 ... | 50 |

(கையொப்பம்) ஸி. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1908 ம் ஆ ஐப்பசிமீ 22 ந் உ.

[Tenders for the Civil Medical Department.]

1909 ம் ஆண்டிலே கொழும்பு பெரிய ஆசுப்பத்திரியிலே தோட்டத்துரைமாருக்கும் சப்பற்காரருக்கும் பிரயாணிகளுக்குமாக விடப்பட்டவும் அந்தோனிஸ் காக்கில் என்ற பெயர்களையுமுடைய அறைகளில் வருத்தவாளிகளாயிருப்பவர்களுடைய அழுக்கான உடுப்புகளைக் கழுவுகிறதற்கு ஒப்பந்தக்கடுதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தடாலுறையில் வைத்து முத்திரையிட்டு "பிரதான சிவில்மெடிக்கல் ஆபிசர் கொழும்பு" என்று மேல்விலாசம் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. கேள்விக்கடுதாசிகளை பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரின் கந்தோரில் இதற்காகவைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும், அல்லது தபால்மார்க்கமாய் அனுப்ப வேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "மேற்சொல்லப்பட்ட அறைகளிலுள்ள அழுக்குடுப்புகளைக் கழுவுகிறதான ஒப்பந்தக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1908 ம் ஆ கார்த்திகைமீ 24 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதியனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம், அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் ஒவ்வொருவரும் ரூபா 50 முற்பணத்தைத் திறைசேரியில் அல்லது கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்க பிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். கொந்திருத்து ஒப்பந்தம்தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததின்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

7. கொந்திருத்து ஏற்றகாலம், ஒப்பந்தம் சரியாய் நடைபெறுதற்குப் பிணையாய் வருவோமென்று இரண்டு போதிய ஆட்கள் எழுதிக் கையொப்பமிட்ட ஒரு தபால் ஒவ்வொரு கேள்விக்கடுதாசியுடனும் அனுப்ப வேண்டும். இந்த இரண்டு பேருடைய மேல்விலாசமும் அந்தத் தபாலிற் காட்டவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் ரூபா 100 பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டியதொகை பணப்பிணையின் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இதன்மேல் பிரியமானால் எவ்வேளையிலாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட உறுதிகளைக் கொந்திருத்துக்காரன் கொடுத்துப் பணப்பிணையை மீட்டுப் புதுப்பிணை உறுதியைத் தன் செலவில் முடித்துக்கொள்ளலாம். இன்னும் தேவையான விவரங்கள் கொழும்பு பெரிய ஆசுப்பத்திரி பொறுப்பிருக்கும் பெரிய டாக்குத்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால், அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச்செய்யத் தவறினால், கேள்வி சரியீனமாகக் கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. ஒப்பந்தக் கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ண்மேந்தாருக்குண்டு.

கையொப்பம்), ஸி. தீ. கிறிவ்வின்,
பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1908 ம் ஆ ஐப்பசிமீ 30 ந் தேதி.

[Tender for clearing latrines, &c., Local Board, Anuradhapura.]

**அநுராசபுரப் பட்டணத்துக் குப்பை கூளம் கூட்டுதலும் கக்கூசு துப்பரவுபண்ணுதலும்.**

1. குப்பைகூளம் கூட்டுதலும், கக்கூசு துப்பரவுபண்ணுகிற கேள்விப்பத்திரமென்று, என்வலொப்பில் எழுதப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1909 ம் ஆண்டுக்கு இதன்பின்னுல் சொல்லப்பட்ட வேலைகளுக்காக 1908 ம் ஆண்டு கார்த்திகைமாசம் 16 ந் தேதி திங்கட்கிழமை மத்தியானம் 12 மணி வரையும் லோக்கல்போட்டு அக்கிராசனர் ஏற்றுக்கொள்ளுவார்.

2. கூட்டுதல்.—நாள்தோறும் றவுண்ட்றோட்டுகளையும் கன்களையும் கூட்டுவித்துக் குப்பைகளை அக்கிராசனர் காலத்துக்குக்காலம் குறிக்கும் இடங்களுக்குக் கரத்தையிலேற்றிக் கொண்டுபோக வேண்டியது.

3. கக்கூசு துப்பரவுபண்ணுதல்.—அக்கிராசனரால் குறிக்கப்பட்ட மணித்தியாலத்துக் கிடையிலும், காலத்துக்குக்காலம் குறிக்கப்படும் இடங்களிலும், பிரசித்தக் கக்கூசிலும், சனங்களின் கக்கூசுகளிலுமிருந்து மலத்தை யெடுத்துக்கொண்டுபோய் அடக்கம்பண்ண வேண்டியது. மேலும் கக்கூசுகளை நன்றாய்த் துப்பரவுபண்ணித் துன்றுநாற்றத்தை அகற்றும் மருந்துகள் போட வேண்டியது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் வேலையைச் சரியாய் நிறைவேற்றுவதற்காக கேட்ட கேள்வித் தொகையின் நாலிலொரு பங்குப் பணம் கட்டவேண்டும்.

அக்கிராசனர் குறைந்த கேள்வியை அல்லது வேறெந்த கேள்வியையாவது ஏற்றுக்கொள்ளும் கட்டுப்பாடு செய்து கொள்ளவில்லை.

இதைப்பற்றிய விபரங்களை லோக்கல்போட்டு ஆபீசில் கேட்டறிந்துகொள்ளலாம்.

பி. தோர்ஸ்போர்க்,
அக்கிராசனர்.

லோக்கல்போட்டு ஆபீஸ்,
1908 ம் ஸு ஐப்பசிமாசம் 27 ந் தேதி.

[Tender for lighting within Local Board Limits at Anuradhapura.]

1909 ம் ஆண்டுக்குத் தெரு லாம்பு கொளுத்துகிறதற்காக கேள்விப்பத்திரமென்று என்வலொப்பில் எழுதப்பட்டு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள், 1909 ம் ஆண்டுக்கு அநுராசபுரப்பட்டணத்திலுள்ள 27 லாம்புகளும் தக்கவிதம் கொளுத்திவரும் முறைப்படி கொளுத்துகிறதற்காக 1908 ம் ஸு கார்த்திகைமீ 16 ந் திகதி திங்கட்கிழமை, மத்தியானம், பன்னிரெண்டு மணி வரையிலும் லோக்கல்போட்டு அக்கிராசனர் ஏற்றுக்கொள்ளுவார்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் வேலையைச் சரியாய் நிறைவேற்றுவதற்காக கேட்ட கேள்வித்தொகையின் நாலிலொருபங்குப்பணம் கட்டவேண்டும்.

அக்கிராசனர் குறைந்த கேள்வியை அல்லது வேறெந்தக் கேள்வியையாவது ஏற்றுக்கொள்ளும் கட்டுப்பாடு செய்துகொள்ளவில்லை.

இதைப்பற்றிய விபரங்களை லோக்கல்போட்டு ஆபிசில் கேட்டறிந்துகொள்ளலாம்.

லோக்கல்போட்டு ஒபீஸ், பி. தோர்ஸ்பேர்ச்,
1908 ம ஸு ஐப்பசிமீ 27 ந உ. அக்கிராசனர்.

[Tender for the Supply of Labour to Purchasers of Salt, Nachchukali.]

"உப்பு விலைக்குவாங்குவோர்க்கு நாச்சிகளி குதங்களால் கொடுக்கப்படும் உப்பை 1909 ம் ஆண்டு தைமீ 1 ந் தேதி தொடக்கம் 1909 ம் ஆண்டு மார்கழிமீ 31 ந் தேதி வரைக்கும் நிறுத்துப் பாதைகளுக்கும் கரத்தைகளுக்கும் ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க" வென்று மேலுரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றத்துரை அவர்களால் 1908 ம் ஆண்டு கார்த்திகைமீ 17 ந் தேதி 11 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்காரர் இதன்பின்னுல் சொல்லப்படும் ஏற்பாடுகளை கவனிக்கவேண்டியது :—

(a) பாதைகளுக்கும் கரத்தைகளுக்கும் உப்பு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க (1,000) ஆயிரம் அந்தர் உப்புக்கு என்ன விதமென்று காட்டியிருக்கவேண்டும்.

(b) நாள்தோறும் கூடியளவு 1,200 அந்தர் உப்புக்குக் குறைவுபடாமல் நிறுத்து ஏற்றுமதிபண்ணிக் கொடுக்க கேள்விக்காரர் ஆயத்தமாயிருக்க வேண்டியது.

(c) கேள்விக்காரர் 1908 ம் ஆண்டு கார்த்திகைமீ 17 ந் தேதிக்கு முன்னே புத்தளம் கச்சேரியில் ரூபாய் (20) இருபது ரூபாய் கட்டவேண்டும். நியமிக்கும் நியாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினுல், இந்தக் கட்டின பணம் கவறண்மேந்துக்காக பறிமுதலாக்கப்படும்.

(d) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக் காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றத்துரை அவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரர் தபால் வழியாக அனுப்பவேண்டும்.

(e) கொந்திறஸ் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காக கேள்விக்காரர் புத்தளத்தில் தங்களுடைய பெயரையும் தாங்கள் இருக்குமிடத்தையும்பற்றி மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டும்.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் வினவி அறிந்துகொள்ளலாம்.

ஆர். சீ. ஒல்னட்,
உதவி ஏசன்றத்துரை.

புத்தளம் கச்சேரி,
1908 ம் ஆண்டு ஐப்பசிமீ 20 ந் உ.

[Supreme Court Criminal Sessions at Kandy.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் குருனாகல் டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை 1908 ம ஸு மார்கழிமீ 1 ந் தேதியாகிய செவ்வாய்க்கிழமை முன்பகல் 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
சி. வி. சிபேரா
பிஸ்காலுக்காக.

குருனாகல் பிஸ்கால் கந்தோர்,
1908 ம ஸு நவம்பர் (கார்த்திகை) மீ 5 ந உ.

[Supreme Court Criminal Sessions at Kandy.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : நுவரெலியா நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் நுவரெலியா டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1908 ம் ஸு மார்கழிமாதம் 1 ந் தேதியாகிய செவ்வாய்க்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ஜே. பி. லூவிஸ்,
பிஸ்கால்.

பிஸ்கால் கந்தோர்,
1908 ம் ஸு நவம்பர் (கார்த்திகை) மீ 10 ந் உ.

[Election of Unofficial Members, Local-Board, Badulla.]

சுதேச தேர்ச்சிச் சங்கத்தைப்பற்றிய 1898 ம் வருடம் 13 ம் நொம்பர்க் கட்டளைச்சட்டத்தினது 12 ம் பிரிவின்படி வதுளைப் பட்டணத்தின் சவுக்கிய தேர்ச்சிச் சங்கத்துக்கு அரசாட்சியாரின் உத்தியோகமில்லாத அங்கத்தவர்களில் மூன்று பேரை தெரிவுசெய்து அவர்கள் அச்சங்கத்தில் 1909 ம் வருடம் தைமாதம் 1 ந் தேதி துவக்கம் 1910 ம் வருடம் மார்கழி மாதம் 31 ந் தேதி வரைக்குமாகிய இரண்டு வருஷ உத்தியோகஞ்செய்யும்படி நியமிக்கும்பொருட்டு வருகிற மார்கழிமாதம் 5 ந் தேதி சனிக்கிழமை 3 மணிக்கு வதுளைக் கச்சேரியில் ஒரு சங்கம் கூடப்படுமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

எச். உவயிற்,
கொவர்ணமேந்து ஏசன்று.

வதுளைக் கச்சேரி,
1908 ம் வருடம் கார்த்திகைமீ 10 ந் உ.

[Election of Unofficial Members, Local Board, Bandarawela.]

சுதேச தேர்ச்சிச் சங்கத்தைப்பற்றிய 1898 ம் வருடம் கட்டளைச்சட்டத்தினது 12 ம் பிரிவின்படி வண்டாரவளைப் பட்டணத்தின் சவுக்கிய தேர்ச்சி சங்கத்து அரசாட்சியின் உத்தியோகமில்லாத அங்கத்தவர்களில் மூன்று பேரை தெரிவுசெய்து அவர்கள் அச்சங்கத்தில் 1909 ம் வருடம் தைமாதம் 1 ந் தேதி துவக்கம் 1910 ம் வருடம் மார்கழிமாதம் 31 ந் தேதி வரைக்குமாகிய இரண்டு வருஷ உத்தியோகஞ் செய்யும்படி நியமிக்கும்பொருட்டு வருகிற மார்கழிமாதம் 1 ந் தேதி செவ்வாய்க்கிழமை 1 மணிக்கு வண்டாரவளை பொலிஸ் ஸ்டேசனில் ஒரு சங்கம் கூடப்படுமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

எச். உவயிற்,
கொவர்ணமேந்து ஏசன்று.

வதுளைக் கச்சேரி,
1908 ம் வருடம் கார்த்திகைமீ 10 ந் உ.

# UNOFFICIAL ANNOUNCEMENTS.

## தொழிலுக்கூட்டபடாதவர்களின் அறிவித்தல்கள்.

[M. D. Silva.]

சிலாபத்து டிஸ்திரிக்கைச்சேர்ந்த வளாப்பிட்டியில் தற்போதிருக்கும் மனவடுகெய் தோமஸ்கோ சில்வா ஆகிய நான் 1907 ம் ஆண்டு முதலாம் இலக்கச் சட்டத்தின் 1B என்னும் செடூலை இரண்டாம் விதிப்படி கண்டி டிஸ்திரிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்ப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்படவும் பதிவுசெய்யப்படவும் இன்று முதல் மூன்று மாசத்தின்பின் ரெஜிஸ்டிரார் ஜெனறல் அவர்களிடம் உத்தரவு கேட்கப்போகிறதை இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

எம். டீ. சில்வா,

வளாப்பட்டி, 1908 ம் ஆண்டு அக்டோபர்மீ 17 ந் உ.

[A. Subasinghe.]

நீர்கொழும்பு டிஸ்திரிக்கைச்சேர்ந்த அளுத்குருகோறளை தாகியப்பத்து உடுகம்போள அபிலிறு சுபசிங்க வாகிய நான் 1907 ம் வருடம் 1 ம் நிம்பர் கட்டளைச்சட்டத்தின் 1 B என்னும் செடூலின் 8 ம் செக்சன்படி ரெத்தினபுரி டிஸ்திரிக்கின் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்சாக வேலைபார்ப்பதற்கு இற்றைக்கு மூன்று மாதத்தின்பின் பதிவுகந்தோர் தலைவர் அவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

ஏ. சுபசிங்க.

உடுகம்பொள, 1908 ம் வருடம் ஒக்டோபர்மீ 15 ந் உ.

[D. J. Gunawardana.]

நீர்கொழும்பு டிஸ்திரிக்கைச்சேர்ந்த அளுத்கூருகோறளை தாகியபத்துவ உடுகம்பளை பெட்டிபதிரன் நெய்ளாக டொன் ஜோன் குணவர்தனவாகிய நான் 1907 ம் வருடம் 1 ம் நிம்பர் கட்டளைச்சட்டத்தின் 1 B என்னும் செடூலினது 8 ம் செக்சன்படி ரெத்தினபுரி டிஸ்திரிக்கில் சிங்களப்பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்ப்பதற்கு இற்றைக்கு மூன்று மாதத்தின்பின் பதிவுக்கந்தோர் தலைவர் அவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

டி. ஜே. குணவர்தன.

உடுகம்பொள, 1908 ம் வருடம் ஒக்டோபர்மீ 15 ந் உ.

[H. S. Manchanayake.]

கொழும்பு பிறின்சஸ்கேட் 3 ம் நிம்பர் வீட்டில் இப்போது குடியிருக்கிற நான் சிலாபத்தின் டிஸ்திரிக்கில் பிட்டிக்கள் கோறளே மெதபலாத்தே நாத்தாண்டி பெரேனிஸ் சுதசிங்மஞ்சநாயக ஆகிய நான் 1907 ம் ஆண்டு 1 ம் நிம்பர் கட்டளைச்சட்டத்தின 1 B என்னும் செடூலினது 8 ம் செக்சன்படி கேகால் டிஸ்திரிக்கில் சிங்களப்பாஷையில் பிரசித்த நொத்தாரிஸாக வேலைபார்ப்பதற்கு இற்றைக்கு மூன்று மாதத்தின்பின் பதிவுக்கந்தோர் தலைவர் அவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

எச். எஸ். மஞ்சநாயக.

கொழும்பு, 1908 ம் வருடம் ஒக்டோபர்மீ 15 ந் உ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.